## Arjunan & Glory



கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக கர்த்தருடைய பணியை செய்து வரும் இத்தம்பதியர் தமிழகத்தின் முப்பத்திரண்டு மாவட்டங்களிலும் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" மாத இதழை அறிமுகம் செய்து பல இடங்களில் கர்த்தருடைய சபையை ஏற்படுத்தி வருகிறார்கள். மேலும் இலங்கை வானொலியிலும், நம்பிக்கை தொலைக்காட்சியிலும் தேவசெய்திகளை கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். அத்துடன் "வேல்டு இவன்சலிசம்" வேதாகம பள்ளியையும் நடத்திவருகிறார்கள். இவர்களின் கர்த்தருடைய பணி சிறக்க ஜெபிப்போம்.

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2015-2017
Posted at Batlagundu Post office on 10th Dec. 2016

*Our Radio & TV Programs*
Sri Lanka Radio SW 25,41 Meter on Saturday 5.30P.M & Nambikkai TV on Monday & Saturday 7.30 P.M

*Cell : 94435 58041*
*Phone : 04543 263 278*
*E-Mail arjunanglory@gmail.com*

**To**

Postman Remarks (If Undelivered):
- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202 and printed by R.Sathiyamoorthy at Bharathi press, 14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 17 டிசம்பர் 2016 கனி 1

## Ye are the light of the world
Matthew 5:14



## நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்
மத்தேயு 5:14

## THE WORD OF CHRIST

"கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக" – கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்

## World Evangelism Gospel Media

**Arjunan in Tamil on Nambikkai TV & Radio:**
TV:On Monday & Saturday 7.30-7.45 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio.
*(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Sunny, Francis & Vinay David in Hindi onTV:**
Every Sunday and Tuesday 7.00-7.30 p.m on shubhSandesh Hind Channel.
*(NEW DELHI Contact Mobile: 09810896789)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hind Channel.
*(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV and Puthuyugam TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Tuesday 6.15-6.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Monday 7.00-7.15 a.m and Thursday 9.30-10.00 p.m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile: 09844 70763)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Rakshana TV:**
Every Sunday 6.00 p.m Every Wednesday 6.30 p.m Every Thursday 11.00 a.m Every Satyavani TV Online:www.Sakthitv.in Every Wednesday & Friday 8.00 p.m
*(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*

## தமிழகத்தில் தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் மாதாந்திர வாசகர் கூட்டங்கள்



பிப்ரவரி 2016
கரூர் மாவட்டம்



மார்ச் 2016
தேனி மாவட்டம்



ஏப்ரல் 2016
கடலூர் மாவட்டம்


**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN
Associate Editor
K.R.K.Ravi Asir


### தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் மாத இதழின் உள்ளே...

ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
ஜெர்ரிபேட்ஸ், பவுலா பேட்ஸ்
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




## வேத அறிவுப் போட்டி எண்: 196

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை பின்வரும் மாத இதழில்களில் காண்க.


1. கர்த்தருடைய பஸ்காவை ஆசரிப்பதில் பரதேசிக்கும் சுதேசிக்கும் ஒரே கட்டளை இருந்ததா?
2. தலீத்தாகூமி என்றால் அதற்கு என்ன அர்த்தம்?
3. பரிதானம் எவர்களின் கண்களைக் குருடாக்கி, எவர்களின் நியாயங்களைத் தாறுமாறாக்கும்?
4. இயேசுவானவர் எவளிடத்தில் குனிந்து நின்று, ஜீரம் நீங்கும்படி கட்டளையிட்டார்?
5. கர்த்தருடைய சேனையின் அதிபதி யாரை நோக்கி: உன் கால்களிலிருக்கிற பாதரட்சைகளைக் கழற்றிப்போடு என்றார்?
6. நான் யூதனா? உன் ஜனங்களும் பிரதான ஆசாரியரும் உன்னை என்னிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள் என்றவன் யார்?
7. பழைய ஏற்பாட்டில் கூடாரத்தில் வாசமாயிருக்கிற ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவளே என்று எந்த ஸ்திரீயைப் பற்றி படிக்கிறோம்?
8. உன் ஜனத்தின் அதிபதியைத் தீதுசொல்லாயாக என்று எழுதியிருக்கிறதே என்றவன் யார்?
9. எவனுடைய சுதந்தரவாளி யாரை நோக்கி: நீர் அதை வாங்கிக்கொள்ளும் என்று சொல்லி, தன் பாதரட்சையைக் கழற்றிப்போட்டான்?
10. நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள் என்றவர் யார்?

### போட்டியாளர்கள் கவனிக்க... வேதாகமம் பரிசு

ஒவ்வொரு முறையும் விடை எழுதும்போது உங்களுடைய பதிவு எண் (அதாவது Ref.No) மற்றும் மொபைல் எண் எழுதவும். நமது மாத இதழை 100 பேருக்கு அறிமுகம் செய்கிறவர்கள் இதழை படிக்க விருப்பமில்லாதவர்களுடைய முகவரிகளை எழுதி அனுப்பவேண்டாம். நன்றி. – ஆசிரியர்

### இம்மாதம் 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' நடத்தும் வேதபாட வகுப்புகளும் சுவிசேஷ கூட்டங்களும் 14

நாள்: 12.12.2016, திங்கள் கிழமை
நேரம்: மாலை 4.00 மணி
இடம்: G.பன்னீர் செல்வம்
4/594, 14- 8வது கிராஸ் Ext.,
அடைக்கலம் அன்னை நகர்
பொன்மலைப்பட்டி - திருச்சி -4
தொடர்புக்கு: 94427 62181



### வேத அறிவுப்போட்டியாளர்களுக்கு ஓர் நற்செய்தி!

தற்போது அறுபதுக்கும் மேற்பட்டோர் வேத அறிவுப்போட்டியில் கலந்து கொள்ளுகிறார்கள். அவர்களை எல்லாம் அழைத்து பாராட்டு சான்றிதழ் கொடுத்து வருடம் ஒருமுறை அவர்களை உற்சாகப்படுத்தலாம் என தீர்மானித்திருக்கிறோம். அந்த நாளையும் தேதியையும் இடத்தையும் பின்னர் அறிவிக்கிறோம்.

தொடரட்டும் உங்களுடைய வேத ஆய்வு! பெருகட்டும் வேதாகம அறிவு! உங்களுக்காகவும் உங்களுடைய குடும்பங்களுக்காகவும் ஜெபிக்கிறோம்.

- ஆசிரியர்

சிறுவர் பகுதி

## மன்னிப்பு

*வேதபகுதி: மத்தேயு 18:23-35*



ஆண்டவராகிய இயேசு சீஷர்களை பார்த்து பரலோகராஜ்யம் தன் ஊழியக்காரரிடத்தில் கணக்குப் பார்க்கவேண்டுமென்றிருந்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது என்று ஒரு உவமையை சொன்னார். அவன் கணக்குப் பார்க்கத் தொடங்கினபோது, பதினாயிரம் தாலந்து கடன்பட்ட ஒருவனை அவனுக்கு முன்பாக கொண்டுவந்தார்கள். அவனுக்கோ கடனைத் தீர்க்க வழியில்லை. அவனுடைய ஆண்டவன் அவனை என்ன சொன்னான் தெரியுமா? அவனையும் அவன் பெண்ஜாதி பிள்ளைகளையும் பின்னும் அவனுக்குள்ள யாவையும் விற்று கடனைத் தீர்க்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது அந்த ஊழியக்காரன் தாழவிழுந்து வணங்கி; ஆண்டவனே! பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்று வேண்டிக் கொண்டான்.

அவனுடைய தாழ்மையான வேண்டுதலை பார்த்த அவனுடைய ஆண்டவன் மனதிரங்கி, அவனை விடுவித்து தனக்கு செலுத்தவேண்டிய கடனை மன்னித்து விட்டான். அவனோ புறப்பட்டுபோகையில் தன்னிடத்தில் நூறு வெள்ளிப்பணம் கடன்பட்டிருந்த உடன் வேலைக்காரனைக் கண்டு ,அவன் தொண்டையை நெறித்து தான் கொடுத்த கடனை கொடுக்கும்படியாககேட்டான். அந்த உடன் வேலைக்காரன் அவன் காலில் விழுந்து பொறுமையாயிருங்கள் எல்லாவற்றையும் விற்று நான் பட்ட கடனை தீர்க்கிறேன் என்றான். அதற்கு அவனோ சம்மதியாமல் கடனை தீர்க்குமளவும் அவனை காவலில் போட்டான். இந்த சம்பவத்தை கண்ட உடன் வேலைக்காரர்கள் துக்கப்பட்டு அதை அவனுடைய ஆண்டவனுக்கு அறிவித்தார்கள். உடனே அவன் ஆண்டவன் அவனை அழைத்து பொல்லாத ஊழியக்காரனே நீ பட்ட கடனை நான் உனக்கு மன்னித்துவிட்டேனே அதுபோல நீயும் உன் உடன் வேலைக்காரனுக்கு மன்னிக்க வேண்டாமா? என்று சொல்லி அவனுடைய ஆண்டவன் கோபமடைந்து அவன் பட்ட கடனை தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான்.

அன்பான தம்பி, தங்கைகளே! ஆண்டவர் நமக்கு தருகிற போதனை என்னவென்றால் நாமும் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், நம் பரமபிதாவும் நம்முடைய தப்பிதங்களை மன்னிக்கமாட்டார். நீங்களும் உங்கள் பள்ளியில் படிக்கின்ற ஒவ்வொருவரும் ,ஒருவருக்கொருவர் மன்னிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். மன்னீப்பீர்களா?

**மனப்பாட வசனம்:**

மனப்பாட வசனம்:
**“மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார்” (மத்தேயு 6:14)**



# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்
## THE WORD OF CHRIST
**புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்**
**மரம் - 17 டிசம்பர் -2016 கனி - 1**

**ஆசிரியருரை**

## நீங்கள் கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே...
## As You Have Received Christ Jesus The Lord...



**ஆ**தி அன்பு பொதுவாக எல்லோருடைய வாழ்க்கையிலும் குறைய ஆரம்பிக்கிறது. இந்த அன்பில் குறையாதவர்களாகயிருக்க நாம் கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே தொடந்து ஆவிக்குரிய விஷயத்தில் வெற்றியுள்ள கிறிஸ்தவர்களாக வாழவேண்டும். "ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக" (கொலோ.2:6,7). ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் இந்தவசனத்தின்படி இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே ஸ்தோத்திரத்தோடே பெருகுவார்கள் என்றால், இன்று உலகமே கிறிஸ்தவமயமாகத்தான் இருக்கும். அவர்களுக்கு வரக்கூடிய சோதனையை சகிக்க பெலன் இல்லாமல் அவரை ஏற்றுக்கொண்ட நாட்களில் இருந்த அன்பில் குறைந்துபோகின்றார்கள். அவருக்குள்ளாக வேர்கொள்ளும்போது நாம் ஒருபோதும் வாடிப்போக மாட்டோம். அவர் மெய்யான திராட்சச்செடியாக இருக்கிறார். நீங்கள் கொடிகளாக இருக்கிறீர்கள் என்பதை மறந்துபோகக்கூடாது. "நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்" (எபே.5:30). நாம் அவருடைய மாம்சத்திற்கும் எலும்புகளுக்கும் உரியவர்கள் என்பதை நினைக்கும்போது எத்தனை ஆசீர்வாதத்திற்கு பங்குள்ளவர்களாகயிருக்கிறோம் என்பதை நினைத்துப் பாருங்கள்.

ஒரு புகழ் பெற்ற கிரிக்கெட் வீரருடைய பேனா நம்மிடத்தில் இருக்கிறது என்றால் அதை எவ்வளவு பெருமையாக சொல்லிக்கொள்வோம். நாமே அவருடைய சரீரத்தின் எலும்புகளுக்கு உரியவர்களாகயிருக்கிறோம் என்பதை நினைக்கும்போது நாம் எந்த அளவு சந்தோஷமுள்ளவர்களாக இருக்கவேண்டுமென்பதை நினைத்துப்பாருங்கள். அவருடைய மாம்சமும் இரத்தமும் உலகத்தின் பாவத்தை போக்கியது. அநேக நோயாளிகளை சுகமாக்கினது. அப்படிப்பட்ட மாம்சத்திற்கும் எலும்புக்கும் சொந்தக்காரர்களென்றால்

அது எத்தனை ஆசீர்வாதமான வார்த்தை. மேலும், "அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும்" என வாசிக்கிறோம். நீங்கள் இயேசுவின் மீது உங்களுடைய ஆவிக்குரிய துவக்கத்தை ஆரம்பித்திருக்கிறீர்களா? முதல் நூற்றாண்டு சபையானது அஸ்திபாரமாகிய கல்லான கிறிஸ்துவின் மீது துவங்கப்பட்டது. தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன். அதின் மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லை என்று வேதத்திலே சொல்லியிருக்கிறது. "அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார் அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்" (எபே.2:20-22). எந்த ஒரு மனிதனும் தானாக சபையில் சேர்க்கப்படுவதில்லை. கர்த்தர் ஒருவரே சபையில் சேர்க்கிறார். அநேகர் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட சபையில் ஐக்கியம் கொள்ளுகிறார்கள். அவர்களுடைய விசுவாசம் தவறாக இருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் வேத வசனங்களை கவனிக்கவேண்டும். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒருவரே அவரே சபையின் மூலைக்கல்லாக இருக்கிறார். மற்றபடி அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் என்பவர்கள் அதற்குமேலாக கட்டப்படுகிறார்கள். அதற்குமேலாக நம்மைப்போன்ற விசுவாசிகள் அத்தோடு இசைவாய் இணைத்து கட்டப்படுகிறார்கள் இப்படியாக கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயம் எழும்புகிறது. இந்தவிதமான நம்பிக்கை உங்களுக்குள் இருக்கிறதா?

அவருக்குள் நாம் நடக்கவேண்டும் என காண்கிறோம். அவருக்குள் என்றால் அவருடைய நாமத்தை தரித்துக்கொண்டு வாழும்போது வரக்கூடிய போராட்டங்களை மேற்கொள்வது. அவர் நாமத்தின் நிமித்தமாக பாடுபடுவது. "ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்" (1பேது.4:16). பாடுகள் வரும்போது தேவன் என்னை மறந்தார் என்றுசொல்லி பொதுவாக எல்லோருமே விசுவாசத்தில் சற்று பெலவீனப்படுவார்கள். அந்தவிதமான நேரங்களில் நாம் தேவனை மகிமைப்படுத்தும்படியாக நம்முடைய வாயின் வார்த்தைகளைக்குறித்து எச்சரிக்கையாக இருக்கவேண்டும். தேவன் நம்மை கண்ணோக்கிக் கொண்டிருக்கிறார். நாம் இவ்வுலகத்தில் கர்த்தருக்கு சாட்சியுள்ள பிள்ளைகளாக ஜீவிக்கவேண்டும். மேலும் பவுல் கொலோசெ சபைக்கு எழுதும்போது; "நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக" என்றார் (கொலோ.2:7). இன்றைக்கு அநேகருக்கு ஆண்டவருடைய போதனை நன்கு தெரியும் ஆனால் அதன்படி நடப்பதில்லை. பலவிதமான சோதனைகள் வந்தவுடன் பின்வாங்கிப்போகிறார்கள். வசனத்தினிமித்தம் உபத்திரவம் வந்தவுடன் மறுதலிக்கிறார்கள். நாம் எந்தஅளவு கர்த்தருடைய வசனத்தினாலே போதிக்கப்பட்டிருக்கிறோமோ அந்த அளவு விசுவாசத்தில் வளரவேண்டும். வேதம் இதை எதிர்பார்க்கிறது. யோபு என்ற தாசனுக்கு கொடுக்கப்பட்ட எல்லாம் பறிபோனது. அப்பொழுது அவன் சொன்ன வார்த்தை கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார் கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான். நாமும் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் சொல்லி விசுவாசத்தில்



## மாதத்தில் இரண்டு நாள் வேதவகுப்பு வாசகர்களுக்கும், வேதாகமத்தை கற்றுக்கொள்ள வாஞ்சிக்கும் அனைவருக்கும் ஓர் அரிய வாய்ப்பு!

டிசம்பர் 2016 முதல் இந்த வேத வகுப்பை துவங்குகிறோம். நீங்கள் தமிழகத்தின் எந்த பகுதியில் இருந்தாலும் இப்பள்ளியில் சேர்ந்து வேதாகமத்தை முறையாக கற்றுக்கொள்ளலாம். மாதத்தில் இரண்டு நாட்கள் 9 மற்றும் 10 தேதிகளில் மட்டுமே வகுப்புகள் கீழ்க்கண்ட இடத்தில் நடைபெறும்.

கலந்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் மொபைல் மூலமாக எங்களோடு தொடர்பு கொண்டு அல்லது கடிதம் எழுதி உங்களுடைய விருப்பத்தை தெரியப்படுத்தலாம். அனுமதி பெற்றபிறகு அனுமதிக்கடிதத்துடன் வரவேண்டும். ஒருநாள் தங்குவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்து தரப்படும். உங்களுக்கு வேண்டிய போர்வை மற்றும் பேஸ்ட் பிரஸ் சோப்பு தட்டு டம்ளர் அவசியம் கொண்டுவரவேண்டும்.

(பயிற்சி காலம் இரண்டு ஆண்டுகள். மாதத்தில் இரண்டு நாட்கள். ஆக மொத்த 48 நாட்கள்) இது வேலை கொடுக்கும் பயிற்சி அல்ல. வேதாகமத்தைக் கற்றுக்கொடுக்கும் பயிற்சி. அனுமதி பெற்று வருக! ஆசீர்வாதத்தைப் பெற்றுச் செல்க!!







*World Evangelism Bible School*
*P.O.Box No.5*
*Batlagundu -624 202*
*South India*
*Mobile:94435 58041*

**வாசகர் கடிதமும்**

**ஆசிரியர் பதிலும்**

*இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் கூத்தூர் சகோதரி ஸ்டெல்லாம்மா எழுதும் வேத அறிவுப்போட்டி எண் 193 க்கு பதில்கள். புத்தகம் சனிக்கிழமை 24.09.2016 அன்று மதியம் 12 மணிக்கு தான் வந்தது சேர்ந்தது. நாங்கள் 25-ம் தேதிக்குள் எப்படி கண்டு பிடிப்பது. 15-ம் தேதிக்குள் புத்தகம் அனுப்பவும்.*

**B.ஸ்டெல்லாம்மா**

***ஆசிரியர் பதில்***

*10-ம் தேதி வத்தலக்குண்டு போஸ்ட் ஆபிஸில் வாசகர் அனைவருக்கும் ஒரே நாளில் அனுப்புகிறோம். பின்பக்க அட்டையில் உள்ளபடி. தாமதத்திற்கான காரணம் தெரியவில்லை. உங்கள் பகுதி தபால் காரரை வினவுங்கள்.*

***அன்புள்ள ஐயா,***

*எனக்கு இந்த மாதம்* 'The Word of Christ' Book 24th Sep. *அன்று தான் தபாலில் வந்தது. உடனே பதில் எழுதி அனுப்புகிறேன். சந்தா பணம் கட்ட எனக்கு விலாசம் தேவை.* Post Box *என்று இருந்தால்* M.O *வாங்க மறுக்கிறார்கள்.தயவு செய்து ஒவ்வொரு மாதமும் தவறாமல் அனுப்பவும். எனக்கு பிரயோஜனமாக உள்ளது. நீங்கள் அனுப்பிய கிறிஸ்தவ தலைமைத்துவ பயிற்சி பாடங்கள் எனக்கு மிகவும் பிரயோஜனமாக உள்ளது.*

***அன்புடன்,* E.Joyce Helen Punitha**

***ஆசிரியர் பதில்***

*ஒவ்வொரு மாத இதழின் பின்புற அட்டைப் பகுதியில் தபால் முகவரியும், எமது விட்டு விலாசமும் வெளியிடுகிறோம். கவனித்து பார்த்து அந்த முகவரியில்* M.O *அனுப்புங்கள். அநேக வாசகர்* Post Box *முகவரிக்கே* M.O *அனுப்புகிறார்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.*

***ஐயா,***

*எனக்கு வயது 69. தனி ஆள். எனக்கு ஒரு சகோதரி மகள் வினாப் பகுதி ஜெராக்ஸ் தருவார்கள் அவர்கள் தரும் பொழுது விடை எழுதுவேன். எனக்கு புத்தகம் வராது.* Ref.No. *இல்லை.*

***அன்புடன்,* J.Victor Suviseshamuthu**

***ஆசிரியர் பதில்***


*இனிமேல் உங்களுக்கு* Ref.No *உடன் மாத இதழ் ஒவ்வொரு மாதமும் அனுப்பப்படும் பெற்றுக்கொண்டு மற்றவர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள். நன்றி*

## நடப்புச் செய்திகள்

- சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் (ஐ.ஓ.சி) கவுரவமிக்க விளையாட்டு வீரர்கள் கமிஷன் உறுப்பினராக இந்திய நட்சத்திர பேட்மிண்டன் வீராங்கனை சாய்னா நேவால் நியமிக்கப்பட்டுள்ளார்
- துல்லியமான தாக்குதல் நடவடிக்கையில் இஸ்ரேல் ராணுவத்தை போன்றது. இந்திய ராணுவம் என்று பிரதமர் நரேந்திரமோடி பெருமிதம்.
- உள் நாட்டிலேயே கட்டப்பட்ட ஐ.என்.எஸ். அரிஹந்த் அணுசக்தி நீர் மூழ்கி போர்க்கப்பல் கடற்படையில் சேர்க்கப்பட்டது.


## வாருங்கள் தேவனை ஆராதிப்போம்

**கிறிஸ்துவின்**
**சபையார் கூடுமிடம்**
**38,மேயர் சிட்டிபாபு தெரு,**
**எல்லிஸ்ரோடு**
**(மவுன்ட்ரோடு சமீபம்)**
**திருவல்லிக்கேணி**
**சென்னை -600 005**
**தொடர்புக்கு:**
**சகோ.தாமஸ்**
**9884047398**



**சகோ.அர்ஜுனன்**
**சபை ஊழியர்**
**94435 58041**




முன்னோக்கி செல்ல வேண்டும். தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; "ஓ தீமோத்தேயுவே, உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக்கொண்டு, சீர்கேடான வீண்பேச்சுகளுக்கும், ஞானமென்று பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு" என்றார் (1தீமோ.6:20). தீமோத்தேயு ஒரு நல்ல போர்ச்சேவகனாயிருந்தவன். அவன் விசுவாசவிஷயத்தில் மிகச்சிறப்பாக இருந்தவன். அவன் விசுவாசத்தில் நன்றாக இருக்கிறானே என்று பவுல் அவனுக்கு புத்திமதிகள் சொல்லாமலில்லை, உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக்கொண்டு, சீர்கேடான வீண்பேச்சுகளுக்கும் ஞானமென்று பொய்யாய் பேர்பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு என்கிறார். இன்றைக்கும் பொய்யான காரியங்கள் நாம் வாழும் பூமியில் கொட்டிக்கிடக்கின்றது. இவைகளுக்கு சிலர் செவிகொடுத்து விசுவாசத்தை விட்டு விலகிப்போகின்றனர். நாமோ நம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற சுவிசேஷத்தை பாதுகாத்து, சீர்கேடான வீண்பேச்சுகளுக்கு விலகி விசுவாசத்தில் தொடர்ந்து வெற்றியுள்ள கிறிஸ்தவர்களாக வாழ்வோம். இப்படிப்பட்ட வாழ்க்கைக்கு நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா?

கொலோசெயர்2:7-ல் விசுவாசத்தில் உறுதிப்பட்டு என்ற ஒரு வாசகத்தை காண்கிறோம். விசுவாசம் நம்மை இரட்சிப்புக்கு நேரே வழிநடத்துகிறது. இந்த விசுவாசத்தில் நீங்கள் உறுதிப்பட்டவர்களாக இருக்கின்றீர்களா? விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம் என்பதை நாம் அறிவோம். இந்த விசுவாசத்தில் நம்முற்பிதாக்கள் உறுதியோடு இருந்து "ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள். சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள், அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலன்கொண்டார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள். ஸ்திரீகள் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந்திருக்கப் பெற்றார்கள்; வேறுசிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலைபெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள்; வேறு சிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள்" (எபி.11:33-36). இப்படிப்பட்ட உறுதியோடு நாம் விசுவாசத்தை மறுதலிக்காமலிருந்து இவ்வுலகத்தில் சாட்சியோடு வாழ்ந்த நம் முற்பிதாக்களைப்போல வாழவேண்டியவர்களாயிருக்கிறோம். "தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" (1யோவா.5:4). தேவனை அறியாத ஒரு நபர் உலகத்தை ஜெயித்துவிட்டான் என்று சொன்னால் அது உண்மைக்குப் புறம்பானது. தேவனால் பிறந்த ஒரு மனிதன்தான் இந்த உலகத்தில் பிசாசு கொண்டுவரும் காரியங்களை ஜெயிக்கமுடியும். தேவனால் பிறந்தவன் என்றால் மறுபடியும் பிறந்தவன். ஒருவன் மறுபடியும் எப்படி பிறக்கமுடியும் என்று நீங்கள் கேட்கலாம். கிறிஸ்துவின் வல்லமையுள்ள வசனங்களை கேட்டு மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றவன் மறுபடியும் பிறந்தவன். இவனோடு தேவனுடைய ஆவியானவர் இருப்பார். இவன் ஆவிக்குரிய வசனங்களுக்குச் செவிகொடுப்பான். இவன் பிசாசுகொண்டு வரும் சகல காரியங்களையும் தேவனுடைய வல்லமையுள்ள வசனத்தினாலே போராடி ஜெயிப்பான். இப்படிப்பட்டவர்களே தங்களுடைய விசுவாசத்தினாலே இந்த உலகத்தை ஜெயிப்பார்கள். மற்றபடி இந்த உலகத்தில் ஜெயித்துவிட்டான் என்று

உலகப்பிரகாரமான வெற்றியை ஒருவன் கொண்டாடினாலும் அவன் உலகத்தை ஜெயித்தவனாக கருதமுடியாது. அவன் ஜெயிக்கவேண்டிய உண்மையான ஒரு போராட்டம் ஒன்று உண்டு. அதுவே ஆவிக்குரிய போராட்டம்.

கடைசியாக நாம் ஒவ்வொன்றிலும் ஸ்தோத்திரத்தோடே பெருகவேண்டும் என்று வாசித்தோம். எல்லாவற்றிற்கும் ஸ்தோத்திரம் செலுத்த கற்றுக்கொள்ளவேண்டும். சிலர் நன்மைகளைப் பெற்றுக்கொண்டால் மட்டும் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவார்கள். தேவனுடைய சமுகத்தில் நன்மைகளைப் பெற்ற நாம் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவதுபோல தேவனுடைய நாமத்தினிமித்தம் பாடுகள் வரும்போதும் ஸ்தோத்திரம் செலுத்தவேண்டும். "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" என்று பிலிப்பியர் 4:6-ல் வாசிக்கிறோம். தேவன் நம்மோடிருக்கிறார் என்ற நம்பிக்கை உங்களில் இருக்குமானால் நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படவேண்டியதில்லை. கவலைகள் நம்முடைய விசுவாசத்தை பாதிக்கக்கூடியவை ஆகையால் நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல் அவைகளைப் பார்க்கிற கர்த்தருக்கு அவைகளை தெரியப்படுத்தவேண்டும். தேவனுக்கு என்ன என்னுடைய கஷ்டங்கள் தெரியாதா என்று ஒரே வார்த்தையில் சொல்லிவிடுவார்கள். தேவனுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. ஆனால் தேவன் தம்மை நோக்கி கூப்பிடுகிறவர்களுக்கு அவர் உதவி செய்ய வல்லவராயிருக்கிறார் அல்லவா? ஆகையால் நாம் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையும் குறித்து உங்களுடைய விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினால் தேவனுக்குத் தெரியப்படுத்த வேண்டும். நம்முடைய ஜெபமானது பொதுவாக இருக்கக்கூடாது. அதில் குறிப்பாக இழந்ததை எண்ணி கவலைப்படாமல், அதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம் சொல்லி ஜெபிக்கவேண்டும். அப்படி ஜெபிக்கும்போது தேவனுடைய சித்தத்தை நாம் ஏற்றுக்கொள்கிறோம் என்று அர்த்தம். நம்முடைய விருப்பமே நடக்கவேண்டும் என்று அநேகர் நினைப்பார்கள். அப்படி நடைபெறாத சமயத்தில் விசுவாச விஷயத்தில் சோர்ந்துபோவார்கள். அன்பானவர்களே, நீங்கள் கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும் அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும் அவருக்குள் நடந்துகொண்டு நீங்கள் போதிக்கப்பட்டபடியே விசுவாசத்தில் உறுதிப்பட்டு ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுங்கள்.

**நாம் தேர்ச்சியடைந்த அளவு ஒழுங்காய் நடந்தால் போதுமா?**

முழுவதும் நன்கு வளர்ச்சியடையவேண்டும் என்று கருதி பத்து சதவீதம் கூட வளர்ச்சியடையாமற்போவார்கள். ஆகையால் பவுல் பிலிப்பிய சபையாருக்கு சொல்லும்போது; "நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ, அதுமுதல் ஒரே ஒழுங்காய் நடந்துகொண்டு, ஒரே சிந்தையாயிருப்போமாக" என்று எழுதுகிறார் (பிலி.3;16). வளர்ச்சியடைந்த அளவு நாம் முதலாவது ஒரே ஒழுங்காய் நடக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். வளர்ச்சியடைந்ததிலிருந்து சற்று சறுக்கி விழுவோமானால் பூரணமாக எப்படி நடக்கமுடியும். படிப்படியாக வளர்ச்சியடைய முற்படுங்கள். நாம் தேர்ச்சியடைந்த அளவு அதாவது அது முதல் ஒரே ஒழுங்காய் நடந்து, ஒரே சிந்தையாயிருப்போம். இஸ்ரவேலர் எகிப்தை விட்டு கர்த்தருடைய





**நிதானமாக,**
**அழுக்கழ,**
**ஜெபத்தோடு.**

**இது**
**ஒரு செல்வத்தின் சுரங்கம்,**
**ஒரு மகிமையின் பரதீசு,**
**ஒரு இனிமையின் நதி.**

**இது**
**வாழ்வில் உனக்குக் கொடுக்கப்பட்டுள்ளது,**
**நியாயத்தீர்ப்பிலே திறக்கப்படும்,**
**என்றென்றும் நினைக்கப்படும்.**

**இது**
**சம்பந்தபடுகிறது மாபெரிய பொறுப்போடு**
**வெகுமதியளிக்கிறது மிகப்பெரிய உழைப்பிற்கு**
**கண்டிக்கிறது இதன் பரிசுத்தக்காரியங்களை**
**அசட்டைப் பண்ணுகிறவர்களை.**

**-The Voice of Truth International.**

*வாசகர் அனைவருக்கும் இயேசுவின் பரிசுத்த நாமத்தில் வாழ்த்துக்கள்!*

*புதிய வருடத்தை காண காத்திருக்கும் உங்களை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக! ஒவ்வொரு வருடமும் நமக்குப் புதிய வருடங்களாகவே இருக்கின்றன. ஆகையால் எல்லாமே நமக்கு புதியவைகள்தான். புதிய வருடத்தில் பலர் புதிய தீர்மானங்களை எடுக்கிறார்கள். ஆனால் புதிய வஸ்திரங்கள் பழையவைகளாக போவதற்குள்ளாகவே அவர்களுடைய புதிய தீர்மானங்கள் பழையவைகளாக போய்விடுகின்றன. ஏனோ தெரியவில்லை!*

*வருடங்கள் தேவனால் ஆசீர்வதிக்கப்படுகின்றன. தீர்மானங்கள் நன்றாயிருந்தாலும், தீர்மானங்களை எடுத்த நீங்கள் ஏன் தடுமாறுகிறீர்கள்? ஏன் அவைகளில் நிற்பதில்லை? வருடங்களை ஆசீர்வதிக்கிற தேவன் நல்லது என்றே காண்கிறார். அவைகளை வரவேற்க காத்திருக்கும் நீங்களும் நானும் நல்லதே நடக்கும் என நம்பிக்கையோடே காத்திருந்து புதிய வருடத்தை வரவேற்போம்!*

**உங்களை புதிய வருடத்தில் சந்திக்கும்**
**அன்பு உள்ளங்கள்**
**இதழின் ஆசிரியர் அர்ஜுனன் மற்றும் சகோதரி குளோரி.**

## தேவனுடைய வார்த்தை சுருக்கிக் கூறப்பட்டுள்ளது
## God`s Word Summarized

**இந்த புத்தகம் வெளிப்படுத்துகிறது**
**தேவனுடைய மனதை,**
**மனிதனுடைய நிலையை,**
**இரட்சிப்பின் வழியை,**
**விசுவாசிகளின் மகிழ்ச்சியை**

**இதனுடைய கோட்பாடுகள் பரிசுத்தமானவை,**
**இதனுடைய கற்பனைகள் பரிசுத்தமானவை,**
**இதனுடைய வரலாறுகள் உண்மையானவை,**
**இதனுடைய தீர்ப்புகள் மாறாதவை**

**வாசி இதை ஞானமடைய,**
**விசுவாசி இதை இரட்சிப்படைய,**
**பயிற்சிசெய் இதை பரிசுத்தமடைய.**

**இது கொண்டுள்ளவைகள்:**
**ஒளி உன்னை வழிநடத்த,**
**போஜனம் உன்னை போஷிக்க,**
**ஆறுதல் உன்னை உற்சாகப்படுத்த.**

**இது வழிப்போக்கனின் வரைபடம்,**
**புனித பயணியின் ஆதாரம்,**
**விமானியின் திசைகாட்டி,**
**படைவீரனின் வாள்,**
**கிறிஸ்தவனின் பட்டயம்**

**இங்கே**
**பரதீசு முன்நிலையில் வைக்கப்பட்டுள்ளது,**
**பரலோகம் திறக்கப்பட்டுள்ளது,**
**நகரத்தின் கதவுகள் மூடப்பட்டிருக்கவில்லை.**

**கிறிஸ்து இதனுடைய மிகப்பெரிய சராம்சம்,**
**நம்முடைய நன்மை இதனுடைய வரிவடிவம்**
**தேவனுடைய மகிமை இதனுடைய முடிவு**



**இது**
**மனதை நிரப்பும்,**
**இதயத்தை ஆளும்,**
**கால்களை நடத்தும்**

**இதை வாசி**



வார்த்தையின்படி கானானுக்குச் சென்றனர். ஆனால் சிவந்த சமுத்திரத்தை நெருங்கும்போது அவர்கள் கானானை நோக்கி விசுவாசத்தில் முன்னேறவில்லை எகிப்தை திரும்பிப் பார்த்தார்கள். விசுவாசத்தில் தளர்ச்சியடைந்தார்கள். எதுவரை சென்றிருந்தார்களோ அந்த அளவு தங்களுடைய விசுவாசத்தை காத்துக்கொண்டிருப்பார்களேயானால் அவர்களுடைய தேவன் அவர்களை நேசித்து அத்தனை ஜனங்களையும் கானானுக்குள் பிரவேசிக்க செய்திருப்பார். ஆனால் அவர்கள் அவிசுவாசிகளாக போனார்கள் என்று காண்கிறோம். அப்படி நாம் சென்றுவிடாதிருக்க நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ அதுமுதல் ஒரே ஒழுங்காக நடந்து, ஒரே சிந்தையாக இருப்போம். கர்த்தர் நமக்கு உதவி செய்வாராக! நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



**"மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" கலாத்தியர் 6:7**



**ஜெபியுங்கள்**

- சென்ற மாத கூட்டங்களை கர்த்தர் ஆசீர்வதித்தமைக்காக...
- புதிய வருட ஊழியங்களுக்காக...
- சபையில் ஆத்துமாக்கள் கர்த்தருக்குள் வளர்ச்சியடைய...
- மாவட்ட ஊழியங்களை தேவன் ஆசீர்வதிக்கும்படியாக...
- புதிய ஊழியர்கள் எழும்ப...

**கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் வேலை செய்ய சுவிசேஷகர்கள் (வாலிபர்கள்) தேவை. உணவும், உடையும், மற்றும் உறைவிடமும் கொடுக்கப்படும்.**

**<u>இயேசு சொல்கிறார்:</u>**

**"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்"**
**யோவான்12:26.தொடர்புக்கு :94435 58041**

**தெரிந்து கொள்வோம்**

# வானொலி, தொலைக் காட்சி

K.R.K.Ravi Asir, Associate Editor

▶ 1927-ல் வானொலி தனிப்பட்டவர்களால் தொடங்கப்பட்டு 1930-ல் அரசு அதை எடுத்துக் கொண்டு இந்தியன் பிராட்காஸ்டிங் சர்வீஸ் என்று நடத்த ஆரம்பித்தது.

▶ ஆல் இந்தியா ரேடியோ என்ற பெயர் 1936-ல் கொடுக்கப்பட்டது. பின்பு 1957-ல் ஆகாஷ் வாணி ஆகிவிட்டது!

▶ இந்தியா சுதந்திரமடைந்த போது இருந்தவை 6 ஒலிபரப்பு நிலையங்களே. இப்போது இருப்பவை 85.

▶ வர்த்தக ஒலிபரப்பு தொடங்கப்பட்டது 1967-ம் ஆண்டு நவம்பர்.

▶ இந்தியாவில் தொலைக்காட்சி முதன் முதலாய் டெல்லியில் 1957-ம் ஆண்டில் அமைக்கப்பட்டது.







# மனிதன் 2002 ல் என்ன நடக்கும் என அறிய ஆவலுடனிருந்தான்

(Man Wondered What Would Happen In 2002)

J.C.Choate



20ம் நூற்றாண்டு முடிவதற்கு சில மாதங்களுக்கு முன்பாக பலர் என்ன நடைபெறப்போகிறது என அறிவதில் அக்கரையுள்ளவர்களாக இருந்தனர். அதிகமான ஜனங்கள் மிகுந்த வியாகுலத்தோடு 2000 - மாவது ஆண்டை எதிர்நோக்கியிருப்பவர்களாகக் காணபட்டனர். இது நாம் வரலாற்றின் ஒரு பெரிய யுகத்தை முடித்து இன்னொரு யுகத்தை நாம் தொடங்குகின்றவர்களாக இருப்பது போல இருந்தது. அரசியலிலும் கூட, மனிதர்கள் தங்களுடைய தேசத்தை 21ம் நூற்றாண்டுக்குள் தலைமைதாங்கி நடத்தும் பதவிக்காக போராடினார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, 20ம் நூற்றாண்டின் தொடக்கமும் உலகெங்குமுள்ள சமயக் குழுக்களுக்கு மிக முக்கியமான ஒரு நிகழ்ச்சியாக காணப்பட்டது.

உண்மையாகவே, இது இப்படி நேரிட்டிருக்கையில் நூற்றாண்டு மற்றும் இயேசு இவ்வுலகை ஆண்டதாகக் கருதப்படும் ஆயிரம் ஆண்டு காலம் முடிவுற்ற எந்த ஆண்டு மற்றும் துவங்கிய இன்னொரு ஆண்டைக் காட்டிலும் எந்த ஒரு மாற்றமும் ஏற்பட்டதாக இருக்கவில்லை ,குறிப்பாக கர்த்தரோடு இது பற்றி என்னபெரியவேறுபாடு இருக்கும்? பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம்வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒரு நாள் போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம் “ (2பேது. 3:8) என பேதுரு கூறியதை நினையுங்கள்.

2000- மாவது வருடத்தைப் பற்றிய விவகாரம் வரையில், கர்த்தருடைய பார்வையில் உலகம் உண்டானதிலிருந்து அனைத்து ஆண்டுகளைப் பற்றிய மனிதனுடைய கணக்கு சரியானதாக இருந்திருக்கிறது என நாம் எப்படி அறிந்தோம்?. இந்தக் கணக்கு அல்லது இரண்டு அல்லது நூறு அல்லது அதற்கு மேல், ஒரு வழி அல்லது இன்னொரு வழியினால் முடிவடைந்திருக்கக் கூடும்! ஆனால் எண்ணிக்கை இருந்தாலும் கூட, அந்தச் செயல் எந்த வேறுபாட்டை ஏற்படுத்தும்? ஒரு நாள் என்பது ஒரு நாளே, மற்றும் ஒரு வருடம் என்பது ஒரு வருடமே மேலும் காலச்சக்கரம் முழுவதிலும், 2000 மாவது ஆண்டு மற்றொரு ஆண்டைக் காட்டிலும் வித்தியாசமானதாகக் காணப்படவில்லை.

பலர் 2000- மாவது ஆண்டை வரவேற்கும் படிக்கு எருசலேமிலிருக்க விரும்பினார்கள் அவர்கள் ஏதோ விசேஷித்த நிகழ்ச்சி அங்கு நடக்கும் என நினைத்தார்கள். சிலர் கர்த்தர் எருசலேம் நகரத்தில் ஆயிரம் வருடம் ஆளுகையை தொடங்கும்படிக்கு வருவார் என உறுதியுடனிருந்தனர். வரப்போவதொன்றைக் குறித்து முன்கூட்டியறியச் செய்யும் தீவிரமான எல்லா சிந்தனையும் மற்றும் மனதில் ஏற்பட்ட ஊகத்தின் தீர்வு என்னவென்றால் கிறிஸ்து அந்த நாழிகையில் அல்லது ஏதோ ஒரு குறிப்பிட்ட தேதியில் வருவதற்கு வாக்குப்பண்ணவில்லை! மாறாக, அவர், “அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்” (மத். 24 :



கீழ்ப்படியவில்லை (நியா.14:1-3). சிம்சோன் நியா.13:5-ன்படி இஸ்ரவேலரை பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிக்கப் பிறந்தவன். ஆனால் தன் திருமண காரியத்தில் அவன் தாயும் தகப்பனும் விருத்த சேதனமில்லாத பெலிஸ்தரிடத்தில் பெண் கொள்ள வேண்டியதென்ன? உன் சகோதரரின் குமாரத்திகளிலும், எங்கள் ஜனமனைத்திலும பெண் இல்லையா என்றார்கள். சிம்சோன் தன் தகப்பனை நோக்கி: அவள் என் கண்ணுக்குப் பிரியமானவள், அவளையே எனக்குக் கொள்ளவேண்டுமென்றான் (நியா.14:3). இன்று வாலிபப் பிள்ளைகள் எத்தனை பேர் இவனைப் போலிருக்கிறார்கள்! தாய்மார்களே, இப்படிப்பட்ட நிகழ்வுகள் உங்களுக்குப் புதியவைகள் அல்ல. இன்றைய வாலிபர்கள் கண்களின் இச்சைக்கு அடிமைகளாகின்றனர். "...மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள் உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்..." (1யோவா.2:16,17). இவ்வண்ணமே அன்று சிம்சோனின் இச்சை ஒழிந்துபோனது. உங்களுடைய வாலிபப் பிள்ளைகளுக்கு தேவ வசனத்தையும் அதினால் உண்டாகும் நன்மைகளையும் பற்றி போதியுங்கள். உன் வாலிபப் பிரயாத்திலே உன் சிருஷ்டிகரை நினை என்று கற்றுக் கொடுங்கள் (பிர.12:7). உங்கள் பிள்ளைகளின் திருமணமென்பது ஆயிரங்காலத்துப் பயிர் என்பர். "அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; ... அவிசுவாசியுடன் விசுவாசிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? (2கொரி.6:14-18). என்றெல்லாம் போதித்து வளரச்செய்யுங்கள். சிம்சோனின் முடிவு மிகமோசமானதாக மாறிவிட்டது. பிறந்தது முதல் தேவனுக்கென்று நசரேயனானவன், கண்களின் இச்சைக்கு இடமளித்து தன் கண்களை இழந்தான் ஒரு வேடிக்கைப் பொருளானான் (நியா.16:21-27). அவன் முடிவு பரிதாபகரமாயிருந்தது.

அன்பு தாயாரே ஜாக்கிரரையாயிருப்போம். அன்னாளைப் போல அநேக சாமுவேல்களை உருவாக்குவோம். எல்லாவற்றிற்கும் மேலாக அழிந்து போய் கொண்டிருக்கிற அநேக பிள்ளைகளை இரட்சிப்பிற்குள் கொண்டுவர வேண்டியவர்கள் என்பதை மறந்துவிடவேண்டாம். கர்த்தர் தாமே நம்பிள்ளைகளை கர்த்தருக்குப் பிரியமான வகையில் வளர்த்து நித்திய ஜீவனுக்கு நேராக வழிநடத்திச் செல்ல நமக்கு உதவி செய்வாராக!




Contact: 94435 58041

JOIN OUR
WORLD EVANGELISM BIBLE SCHOOL
RIGHT NOW

தேவ செய்திகள் அடங்கிய CD & DVD எங்களிடம் உள்ளது ரூ.100/- அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள் உங்கள் முகவரி மற்றும் மொபைல் எண்ணை SMS பண்ணவும். 9443558041



பெண்கள் பகுதி

## தாய் – Mother

*J.Glory Arjunan*



**– சென்ற மாத இதழின் தொடர்ச்சி**

அடுத்ததாக, இன்னொரு தாயைக் குறித்துப் படிப்போம். வேதம் நம்மிடம் விரும்பும் காரியம் என்னவென்று அறிந்துகொள்வோம். லேயாள், பன்னிரென்று கோத்திர பிதாவாகிய யாக்கோபின் மனைவிதான் இவள். "லேயாள் யாக்கோபுக்குப் பெற்ற குமாரத்தியாகிய தீனாள் தேசத்துப்பெண்களைப் பார்க்கப் புறப்பட்டாள் (ஆதி.34:1). வாலிபப் பெண்கள் தங்கள் தோழிகளைப் பார்க்க வெளியில் செல்வது இப்போதெல்லாம் சகஜமாகிவிட்டது. நாகரீகம் என்ற போர்வையில் வாலிபப் பெண்கள் சுதந்தரமாக உலா வருகின்றனர். சில பெற்றோர்களும் இதைக் கண்டு கொள்வதில்லை. அன்றும் லேயாள் தன் ஒரே மகள் தனியாக தேசத்துப் பெண்களை பார்க்கப் புறப்பட்டாளே என்று கவலை கொள்ளவில்லை போலும் தீனாளுக்கு என்ன நடந்தது? "...அந்த தேசத்துப் பிரபுவாகிய சீகேம் என்பவன் கண்டு, அவளைக் கொண்டு போய் அவளோடே சயனித்து, அவளைத் தீட்டுப்படுத்தினான்" (ஆதி.34:2). தன் இஷ்டத்திற்கு விடப்பட்ட பிள்ளையின் நிலை எவ்வளவு மோசமானது. அது மாத்திரமல்ல அவளது சகோதரர்கள் அந்த தேசத்து ஆண் மக்கள் அனைவரையும் கொன்று போட்டார்கள். நீதி.29:15 கூறுகிறது, "...தன் இஷ்டத்திற்கு விடப்பட்ட பிள்ளையோ தன் தாய்க்கு வெட்கத்தை உண்டு பண்ணுகிறான்" அன்பு தாய்மாரே, இவ்வசனத்தை நினைவுகூர்ந்து எச்சரிக்கையாயிருங்கள்.

பழைய ஏற்பாட்டுப் புத்தகத்தில் நியாயாதிபதிகள் 13-16-ம் அதிகாரங்கள் முடிய ஒரு சம்பவத்தை காண்கிறோம். வாலிபப் பிள்ளைகள் அனைவரும் வாசிக்க வேண்டிய ஒரு பகுதி என்றே கூறலாம். மலடியாகயிருந்த மனோவா என்பவரின் மனைவி கர்த்தருடைய தூதனால் உரைக்கப்பட்டபடி கர்ப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெற்றாள். கவனியுங்கள், இப்பிள்ளையாண்டான் சிம்சோனைப் பெற்றெடுப்பதற்கு முன்பே தாயும், தகப்பனும் கர்த்தருக்குப் பிரியமான முறையில் பிள்ளையை வளர்க்க எப்பேர்பட்ட கவனம் செலுத்தியுள்ளனர்! தாயானவள் தன் பிள்ளை வயிற்றிலிருக்கும்போதே வயிற்றைக் கட்டி பிள்ளையை வளர்ப்பது போல, கர்த்தருடைய தூதனின் அறிவுரைப்படி "திராட்சச் செடியிலே உண்டாகிறதொன்றும் சாப்பிடாமலும், திராட்சரசமும் மதுபானமும் குடியாமலும், தீட்டானதொன்றும் புசியாமலும்... (நியா.13:4,14) இருந்தாள். தாயானவள் இந்தக் கட்டுப்பாட்டிலிருந்தாள் என்றால், தகப்பன் எப்படியென்று பாருங்களேன். தகப்பனாகிய "...மனோவா கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி; ஆ, என் ஆண்டவரே... பிறக்கப்போகிற பிள்ளைக்காக நாங்கள் செய்ய வேண்டியதை எங்களுக்குக் கற்பிப்பீராக என்று வேண்டிக்கொண்டான்"(நியா.13:12). மேலும் "அந்தப்பிள்ளையை எப்படி வளர்க்க வேண்டும் அதை எப்படி நடத்த வேண்டும் என்று கேட்டான்" (நியா.13:12). இப்படி இருவரும் தங்கள் பிள்ளையின் விஷயத்தில் மிகக்கவனமாக தூதனின் அறிவுரைப்படி நடந்துகொண்டனர். ஆனால் அவர்களது பிள்ளையாண்டான் சிம்சோன் வாலிபனான போது பெற்றோரின் அறிவுரைக்குக்



36) என கூறியிருந்தார். இப்போது, கிறிஸ்து எப்போது வருவார் என்பதை பிதா ஒருவர் மாத்திரம் அறிந்திருக்கிறபோது, எவ்வாறு உங்களுக்கும் அல்லது எனக்கும் அல்லது வேறொருவருக்கும் அந்த நாளை ஊகித்துப் பார்க்க இயலக் கூடியதாக இருக்கும்? மேலும் கிறிஸ்து 2000 - மாவது ஆண்டில் மீண்டும் வருவார் என்று நமக்கும் உறுதியாக நினைத்துக் கொள்ள எவ்வாறு இயலும்? அவர் அந்த நாளுக்கு முன்பு அல்லது அந்த நாளுக்குப் பின்பு வர இயலும், ஆனால் ஒரு மனிதனும் அதன் எவ்வழியையும் அறிந்திருக்கமாட்டான். இப்படிப்பட்ட காரியம் தேவனுடைய கரங்களில் உள்ளது மேலும் நாம் அவைகளை அவ்விடமே விட்டு விட வேண்டும்.

கர்த்தர் நீதியுள்ள 1000 வருட ஆட்சி செய்யும்படிக்கு எருசலேமுக்கு மீண்டும் வருகிறார் என்பதைப் பற்றிய வினாவானது பரிகாசத்திற்குரியதாகும். வேதாகமம் எவ்விடத்திலும் இவ்வாறான கோட்பாட்டினை போதிக்கிறதில்லை. இயேசு மீண்டும் பூமிக்கு ஏன் வரப்போகிறார்? அவர் ஒரு முறை பூமிக்கு வந்து, புறக்கணிக்கப்பட்டு சிலுவையில் அறையப்பட்டார். அவர் ஏன் மீண்டும் வரவேண்டும்? வருவதற்கான நோக்கம் என்ன? கிறிஸ்து பரலோகத்திலுள்ள பிதாவினிடத்திற்கு எழுந்தருளிப் போனபோது, வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டுபேர் இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள் என்பதாக வேதம் கூறுகிறது ( அப். 1:11) . அவர்கள் அவர் எப்போதவது வந்து மீண்டும் பூமியின் மேல் ஆளுகையை நிலைநாட்டுவார் என்று சொல்லவில்லை. குறிப்பாக பவுல், கர்த்தர் வரும்போதும், நாம் அவரை சந்திக்கும்படி ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்!என்று குறிப்பிட்டிருக்கிறார் (1 தெச. 4:16,17). இது "பரவசத்தில்" அல்லது எருசலேமில் ஒரு மாம்ச பிரகாரமான ராஜ்யத்தில் ஆயிரவருட ஆட்சியில் நம்பிக்கையுள்ளவர்களால் வர்ணிக்கப்பட்ட ஒரு காட்சியல்ல! ஆனால் யார் தேவ ஆவியினால் பேசினார்கள், பவுல் அல்லது தற்கால பிரிவினைக்கார போதகர்கள்?

இத்தோடு கூட பலர் "Y2K" (2000 மாவது ஆண்டு) யின் மேல் செய்யும்படிக்கு ஒரு பெரிய பிரச்சனையை உருவாக்கி, அனைத்து கம்ப்யூட்டர்களும் செயலிழந்து போகும் மேலும் உலகில் ஒவ்வொரு இயந்திர சாதனத்தின் மூலம் தேவையான பாதுகாக்கப்பட்ட விஷயங்கள் எல்லாம் ஸ்தம்பித்துவிடும் என்ற பயத்தை உருவாக்கி கொண்டிருந்தார்கள் நாம் கம்ப்யூட்டர் பிரச்சனைகள் சரியாக பழைய ஒழுங்கு நிலைக்கு மீண்டும் திரும்பும் வரை 2000- மாவது ஆண்டு தொடக்கத்திற்கென தண்ணீரையும், உணவையும், பணத்தையும் சேமித்து வைக்கும்படி ஊக்குவிக்கப்பட்டோம். சிலர் அந்த நாளை பற்றி எதிர்பார்த்திருந்த விபரீதம் ஏற்கனவே சரியாக்கப்பட்டன எனக் கூறி, அந்த பயத்தினை போக்கினார்கள்.

எப்படியாயினும், 21 ம் நூற்றாண்டின் முக்கியகாரியம், என்னவென்றால் காலம் நிறைவேறும் முன்னே, தேவனிடத்தில் விசுவாசம் வைத்து. கிறிஸ்துவின் உபதேசத்திற்குக் கீழ்ப்படிவதின் மூலம் அவரை இரட்சகராக ஏற்றுக் கொண்டு, இரட்சிப்படையும் படிக்கு விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று கர்த்தருடைய சபையில் சேர்க்கப்படுவதும், அவரிடத்தில் நம்பிக்கையுடனிருப்பதுமே ஆகும். அப்போது தான் அவர் மீண்டும் வரும்போது அவரை சந்திக்க நாம் ஆயத்தமாயிருப்போம்..... அந்த நாழிகை எப்போதாகவும் இருக்கலாம். ( எபி. 11:6; யோவா. 14:1-3; மாற். 16:16;அப். 2:38 -47; வெளி. 2:10).




"கர்த்தருடைய வேதம் குறைவற்றதும்,ஆத்துமாவை
உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய சாட்சி
சத்தியமும், பேதையை
ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது.
கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும்,
இருதயத்தைச் சந்தோஷிப்பிக்கிறதுமாயிருக்கிறது;
கர்த்தருடைய கற்பனை துய்மையும், கண்களைத்
தெளிவிக்கிறதுமாயிருக்கிறது.
கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் சுத்தமும்,
என்றைக்கும் நிலைக்கிறதுமாயிருக்கிறது;
கர்த்தருடைய நியாயங்கள் உண்மையும், அவைகள்
அனைத்தும் நீதியுமாயிருக்கிறது.
அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும் பொன்னிலும்
விரும்பப்படதக்கதும், தேனிலும் தேன்கூட்டிலிருந்து
ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாய்
இருக்கிறது.
அன்றியும் அவைகளால் உமது அடியேன்
எச்சரிக்கப்படுகிறேன், அவைகளைக்
கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலன் உண்டு"
சங்கீதம் 19: 7 - 11

## பொது அறிவுக் களஞ்சியம்

- ❒ பிறந்தது முதல் இறப்பது வரை பல்லி தண்ணீரே குடிப்பதில்லை.
- ❒ தலைமுடி ஒரு வருடத்தில் 40 செ.மீட்டர் வரை வளருகிறது.
- ❒ உலக மக்களால் அதிகமாக உச்சரிக்கப்படும் வார்த்தை "ஓ.கே."
- ❒ எறும்புக்கு மொத்தம் 5 மூக்குகள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பணியை செய்கின்றன.
- ❒ சல்மன் என்ற மீன், நீர் ஓடும் திசையில் நீந்தும்போது பின்புறமாக நீந்தும்.

**நம்பிக்கை TV சேனலில்**
**ஒவ்வொரு வாரமும்**
**திங்கள் மற்றும்**
**சனிக்கிழமைகளில்**
**மாலை 7.30 மணி முதல்**
**'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்'**
**நிகழ்ச்சிகளைப் பாருங்கள்**
**9443558041**

'ஒரே வழி' வேதபாடம் **The Master Course**
படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக
ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate**
பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**



## தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது
-1யோவான் 4:10

**இஸ்ரவேலர் எகிப்தென்கிற இருப்புக்காளவாயின் நடுவில் அந்நியராய், பரதேசியாய், அடிமையாய் வாழ்ந்த காலம் 430 வருடம்.**

- ✶ *சங்கடத்திலும் அடிமைத்தனத்திலும், எகிப்தியரின் கைக்கும், பார்வோனின் கைக்கும் நீங்கலாக்கி அந்நியராய், பரதேசியாயிருந்த எங்களை விடுவித்த யோகோவா மீட்பரே!*
- ✶ *செங்கடலை இரண்டாக பிரித்து வெட்டாந்தரையாக்கி கால் நனையாமல் நடத்திச்சென்றவரே!*
- ✶ *மேக ஸ்தம்பத்தில் பகலிலும், அக்கினிஸ்தம்பத்தில் இரவிலும் முன்நின்று வழி நடத்தினீரே!*
- ✶ *தாகத்தால் பாலை நிலத்தில் தவித்தபோது, கன்மலையின் தண்ணீரை சுரக்கச் செய்து தாகம் தீர்த்தவரே!*
- ✶ *கானகத்தில் காடையும், மன்னாவும் உணவாக கொடுத்து உயிர்காத்தவரே!*
- ✶ *கானான் தேசத்தை வாக்களித்து பாலும் தேனும் ஓடிய அவைகளை சுதந்தரமாக கொடுத்தவரே!*
- ✶ *எவ்வளவு மனதிரங்கி, மகிமையாய் பெத்லகேமில் இயேசு நாமத்தில் பிறக்கச் செய்த தயாபரனே!*
- ✶ *பெத்லகேமில் பிறந்த இயேசு உலகுக்கே அழகு!*
- ✶ *பெத்லகேமில் பிறந்த இயேசுவுக்கு மன்னிப்பும், இரட்சிப்பும் பேரழகு!*
- ✶ *என் ஆத்துமாவே அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் இயேசுவை ஸ்தோத்திரி!*
- ✶ *என் முழு உள்ளமே இயேசுவின் பேரிரக்கத்தையும், பேரான்மையும், பேராற்றலையும் சுதந்தரி!*
- ✶ *பூமியில் இயேசுவின் ஜனனம், பூமியெங்கும் தேவ கிருபையின் பிரசன்னம்!*



*இயேசுவின் இனிய பணியில் அடியேன் என்றும்,*
K.S. *மாணிக்கவாசகம்*

*-Selected*

**பாராட்டுகிறோம்**
'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' அலுவலகத்திற்கு 100 புதிய வாசகர்கள் முகவரிகளை சேகரித்து அவர்களுடைய மொபைல் எண்ணுடன் சகோதரி ஜெயமணி ராஜம்மாள் அவர்கள் கடலூர் பகுதியிலிருந்து அனுப்பி வைத்திருக்கிறார்கள்.
அவர்களை பாராட்டி அவர்களுக்கு ஒரு முழுவேதாகமம் பரிசாக கொடுக்கப்படுகிறது. இந்த சகோதரியைப்போல புதிய வாசகர்களை அறிமுகம் செய்கிறவர்களுக்கும், பரிசுத்த வேதாகமம் பரிசாக கொடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.



பெண்கள் பகுதி

## இரட்சகர் - Saviour
*-Betty*

JESUS CHRIST
IS THE SAVIOUR OF ALL PEOPLE




– சென்ற மாத இதழின் தொடர்ச்சி

**நிறைவேற்றம்:**

"அந்த வழியாய் நடந்து போகிறவர்கள் தங்கள் தலைகளைத்துலுக்கி: தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன்மேல் நம்பிக்கையாயிருந்தானே, அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்றார்கள்" (மத்.27:39,43).

**அவருடைய உடைகள் சீட்டுப்போட்டு பங்கிடப்படுதல்:**

"என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின் பேரில் சீட்டுப்போடுகிறார்கள்" (சங்.22:18).

**நிறைவேற்றம்:**

"போர்ச்சேவகர் இயேசுவைச் சிலுவையில் அறைந்த பின்பு, அவருடைய வஸ்திரங்களை எடுத்து, ஒவ்வொரு சேவகனுக்கு ஒவ்வொருபங்காக நாலு பங்காக்கினார்கள்; அங்கியையும் எடுத்தார்கள், அந்த அங்கி தையலில்லாமல் மேலே தொடங்கி முழுவதும் நெய்யப்பட்டதாயிருந்தது என்று இதைக்குறித்துச் சீட்டுப்போடுவோம் என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள். என் வஸ்திரங்களை தங்களுக்குள்ளேபங்கிட்டு, என் உடையின் மேல் சீட்டுப் போட்டார்கள் என்கிற வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக போர்ச் சேவகர் இப்படிச் செய்தார்கள்" (யோவா.19:23,24).

**கசப்பு கலந்த காடியை குடிக்க கொடுத்தல்:**

"நிந்தை என் இருதயத்தைப் பிளந்தது; நான் மிகவும் வேதனைப் படுகிறேன்; எனக்காகப் பரிதபிக்கிறவனுண்டோ என்று காத்திருந்தேன், ஒருவனும் இல்லை; தேற்றுகிறவர்களுக்குக் காத்திருந்தேன், ஒருவனையும் காணேன். என் ஆகாரத்தில் கசப்புக் கலந்து கொடுத்தார்கள், என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக் கொடுத்தார்கள்" (சங்.69:20,21).

**நிறைவேற்றம்:**

"ஒருவன் ஓடி, கடற் காளானைக் காடியிலே தோய்த்து அதை ஒரு கோலில் மாட்டி, அவருக்குக் குடிக்கக் கொடுத்து: பொறுங்கள், எலியா இவனை இரட்சிக்க வருவானோ பார்ப்போம் என்றான்" (மாற்.15:36).

**ஐசுவரியவானோடே அடக்கம் பண்ணப்படுதல்:**

"துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள்; ஆனாலும் அவர் மரித்த போது ஐசுவரியவானோடே இருந்தார்; அவர் கொடுமை செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை" (ஏசா.53:9).

**நிறைவேற்றம்:**

"சாயங்காலமமானபோது இயேசுவுக்குச் சீஷனும் ஐசுவரியவானுமாயிருந்த யோசேப்பு என்னும் பேர் கொண்ட அரிமத்தியா ஊரானாகிய ஒரு மனுஷன் வந்து, பிலாத்துவினிடத்தில் போய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டான். அப்பொழுது சரீரத்தைக் கொடுக்கும்படி பிலாத்து கட்டளையிட்டான். யோசேப்பு அநத்ச்சரீரத்தை எடுத்து துய்யதான மெல்லிய துப்பட்டியிலே சுற்றி, தான் கன் மலையில் வெட்டியிருந்த தன்னுடைய புதிய கல்லறையிலே அதை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டி வைத்துக்போனான்"(மத்.27:57-60).



## இயேசுவின் பாதங்களைக் கழுவிய ஸ்திரீ – லூக்.7:36–50
## Woman that washed Jesus` Feet - *Pula Bates*

இயேசு பரிசேயர் வீட்டிற்கு விருந்துக்கு அழைக்கப்பட்டார்

பாவியாகிய ஸ்திரீ இயேசுவுக்கு செய்ய வேண்டிய கனத்தைச் செய்யும்படி அங்கு வருகிறாள்.

பரிசேயன் வரவேற்பிற்கான எந்த கிரியையும் நடப்பித்திருந்தானா? இல்லை.

நாம் அவளைப் பார்க்கும்போது அவள் மிகவும் தாழ்மையானவள்.

அவள் இயேசுவின் பாதங்களைக் கழுவி அபிஷேகம் செய்கிறாள் - அவருடைய தலையை அல்ல.

அவர்கள் பொதுவாக தங்களது பாதங்களின் முன்பகுதியினை மேஜைக்கு வெளியே நீட்டியிருப்பார்கள்.

அவள் அவருடைய பாதங்களை முத்தஞ்செய்ததுமல்லாமல் தன்னுடைய கண்ணீரினால் கழுவுகிறாள்.

இயேசுவின் பாதங்களைக் கழுவ எவ்வளவு அதிகமாக கண்ணீர் சிந்த அழுதிருக்க வேண்டியிருந்திருக்கும்?

அவள் எவ்வளவுக்கு அதிகமாக கண்ணீர் சிந்தினால் அவருடைய பாதங்களை கழுவ முடியுமோ அவ்வளவுக்கதிகமாக கண்ணீர் சிந்தியதைப் பார்க்கும்போது அவளது ஆவிக்குரிய நிலையில் அவளது விசுவாசமும் நம்பிக்கையும் நாம் நினைக்கும் போது அது எவ்வளவாய் இருந்திருக்கிறது என்று எண்ணுகிறோம்?

வச.48 இயேசு இவளுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டது ஏனென்றால் இவள் அதிகமாய் அன்புகூர்ந்தாள் என்றார்.

வச.50 அத்துடன் இயேசு உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார்.

அவள் ஞானஸ்நானம் பெற்றவளா? அநேகமாக, ஏனென்றால் இயேசு பரிசேயர், யோவானுடைய ஞானஸ்நானத்தை மறுதலித்தார்கள் என்று பேசுகிறார்.

வச.30 இயேசுவை மரியாதைக்குரிய ஒரு விருந்தாளியாக நடத்தாத பரிசேயரின் கதையைச் சொல்ல ஆரம்பிக்கும் முன் அதிக பாவஞ்செய்த ஸ்திரீயாயிருந்தாலும் அவள் அதிகமாய் அன்புகூர்ந்தாளே, இதில் எது நீதியானது.

இச்சம்பவத்தில் வாசிக்கின்ற இக்கருத்தானது நாம் நம் இருதயங்களின் காரியங்களை திரும்பிப்பார்த்து மனதில் இருத்திக் கொள்ளும் நேரமாக நம்முடைய நினைவுகூருதலுக்காகவும் இயேசு நமக்குச் சொல்ல முயற்சிக்கின்றார் என்பதற்கான ஒரு நல்ல மாதியாக இருக்கிறது.

ஒருவேளை இச்சம்பவத்தின் கருப்பொருள் அவள் அதிகமாக அன்பு கூர்ந்தபடியால் அவள் அதிகமாக மன்னிக்கப்பட்டாள் என்றிருக்கலாம்.


நாம் நம்முடைய வாழ்வில் பாவத்தை கொண்டவர்களாக இருக்கிறோமா?

நாம் எப்பேர்பட்ட மாபெரும் கிருபையைப் பெற்றவளாயிருக்கிறோம் என்று உணருகிறோமா?

## பாடம் -21 செங்கடல் சட்டங்கள்

Red Sea Rules *- Jerry Bates*

- சென்ற மாதஇதழின் தொடர்ச்சி




உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எங்கேயிருக்கிறீர்கள்? இன்று நீங்கள் செங்கடலை எதிர் கொண்டிருக்கலாம் தேவன் உங்கள் வாழ்க்கையைப் கட்டுப்பாட்டில் வைத்திருக்க விடுங்கள். 1கொரிந்தியர் 10-ல் பவுல் சொல்வதுபோல இஸ்ரவேலர்கள் மோசேசக்குள்ளாக உருக்கமாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். அந்தச் சமயத்தில் அவர்கள் முற்றிலும் மோசேயின் கட்டுப்பாட்டில் இருந்தார்கள். நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படும்படி நம்மை ஞானஸ்நானம் பெறும்படி இயேசு கட்டளையிடுகிறார் (அப்.2:38). தேவனுடைய ஆளுகைக்குள்ளாக நம்மை வைக்க வேண்டும். உங்களால் செய்ய முடியாததினாலே எல்லாவற்றையும் சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். நிச்சயமாகவே நான் சொல்கிறேன் இஸ்ரவேலர்கள் செங்கடலருகே எல்லாவற்றையும் குறிப்பிட முயற்சித்தார்கள். ஆனால் அவர்களால் முடியவில்லை. தேவனை முழுவதும் நம்பி தேவனுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்க விடுங்கள்.

### பாடம் - 22
### லீதியாளின் இருதயம் திறக்கப்பட்டது
### அப்போஸ்தலர் 16:12-15

1. தேவன் பவுலை இந்த நகரத்துக்கு அனுப்பினார். பவுல் ஒரு தரிசனங்கண்டார். அந்தத் தரிசனத்தில் மக்கதோனியாவிலிருந்து ஒருவன் வந்து அவரை வேண்டிக் கேட்டுக்கொண்டடு மக்கதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவி செய்யுங்களென்று சொன்னான்.

2. பவுல் ஆசியாவுக்குச் செல்ல நோக்கம் கொண்டிருந்தார். ஆனால் அப்படிச் செய்யாதபடி தேவனால் தடை செய்யப்பட்டார். முன்பு ஆசியாவுக்கு மட்டுமல்ல பெத்தினியாவுக்கும் போக தேவன் தடை செய்தார். துரோவா ஏஜியன் கடற்கரையில் அமைந்துள்ள ஒரு பட்டணம். ஒவ்வொரு நாளும் அந்தத் துறைமுகத்துக் கப்பல் வருவதில்லை குறிப்பாக அதிக முக்கியமில்லாத நியாப்போலிஸ் நகரத்துக்குச் செல்ல அவர்கள் நேரான சாலையில் சென்றார்கள். ஆனால் காற்று அவர்களுக்கு சாதகமாக இருந்ததென்று தெரிகிறது. இரண்டு நாட்களுக்குள் அவர்கள் கடலைக் கடந்து விட்டார்கள். பின்பு திரும்ப வருவதற்கு அவர்களுக்கு ஐந்து நாட்களானது. (அப்.20:6). அது அதிர்ஷடமா?

3. பவுல் வெளிப்படையாக நியாய சங்கத்துக்கு சென்று ஓய்வு நாட்களில் பிரசங்கிப்பார். நன்கறிந்தபடி இந்த கிரேக்க நகரத்தில் ஒரு நியாயசங்கமுமில்லை. அதன் பொருள் என்னவென்றால் அந்த கிரேக்க நகரத்தில் யூதர்கள் ஆலயம் அங்கே இல்லை. வெளிப்படையாகத் தெரிந்தபடி அங்கே தேவனைத் தொழுது கொள்ளும் சிறு கூட்டமாக பெண்களே இருந்தனர். அவர்களில் ஒருவர் லீதியாள்.

**I லீதியாள் யார்? லீதியாள் கடினமாக உழைப்பவர்.**

1.இந்த சமயத்தில் அவளுடைய சொந்த ஊராகிய தியத்தீராவிலிருந்த 250 அல்லது 300 மைல்களுக்கு அப்பாலுள்ள பிலிப்பி என்ற பட்டணத்தில் வாழ்ந்துகொண்டிருந்தாள்.



2. அவள் வியாபாரம் செய்யும் ஒரு பெண்மணி. இரத்தாம்பரம் மிகவும் மிகவும் விலையுயர்ந்த பொருள். அந்த சமுதாயத்தில் மிகவும் மதிக்கப்பட்ட ஒன்றாயிருந்தது. லூக்கா 16-ல் விவரிக்கப்பட்டுள்ள ஐசுவரியவான் இரத்தாம்பரம் உடுத்தியிருந்தான் என்று சொல்லப்பட்டுள்ளது. அவள் அந்த விதமான அதிக விலையுள்ள பொருட்களின் மொத்த வியாபாரியாக இருந்தபடியால் உலகப் பிரகாரமான உடைமைகளோடு நல்ல வசதியுள்ளவளாக இருந்தாள் என்று தெரிகிறது.

3.இதோடு கூட அவள் ஒரு இல்லத்தினுடைய தலைவி. அவள் விதவையாயிருக்கலாம் அல்லது திருமணமாகாமலிருக்கலாம் என்றும் அர்த்தமாகிறது. அவள் ஒரு தேவ பக்தியுள்ள பெண்.

1. அவள் ஒரு யூதப் பெண் அல்லது வேறு மதத்திலிருந்து மாற்றப்பட்டவளாயிருக்கலாம். அவள் தேவனைத் தொழுது கொண்டாள். தேவனை உண்மையாய்த் தொழுது கொண்ட புறஜாதியாரைக் குறிக்கும்படி இந்த வார்த்தை அப்போஸ்தலருடைய நடபடிகளில் பலமுறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

2. இந்த கிரேக்க நகரத்தில் மிகவும் அசாதாரணமான ஓய்வுநாள் ஆசரிப்பை இவள் கைக்கொண்டு வந்தாள். ஓய்வு நாளில் தன் வியாபாரஸ்தலத்தை மூடியதால் அது சாதகமாயிருந்தது.

3. அவள் ஒரு ஒழுக்கமுள்ள பெண் என்பதில் சந்தேகமில்லை.

4. மற்றவர்களை நன்கு உபசரிக்கும் தன்மையுள்ளவள். பவுலையும் அவரைச் சார்ந்தவர்களாகிய சீலா, தீமோத்தேயு, லூக்கா போன்றோரையும் வரவேற்று உபசரிக்குமளவிற்கு அவளுக்கு பெரிய வீடு இருந்தது.

5. இயேசு கிறிஸ்துவை அறியாமலிருந்தலினாலே அவள் இன்னும் இரட்சிக்கப்பட்டாத நிலையிலேயே இருந்தாள். சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியாமல் ஒருவரும் இரட்சிக்கப்பட முடியாது (ரோம.1:4). ஒருவர் தன்னுடைய நன்னடத்தையில் தேவ பக்தியினால் அல்லது கிறிஸ்து இல்லாமல் இரட்சிக்கப்படக் கூடுமென்றால்; பின்பு பவுல் அப்படிப்பட்ட தேவபக்தியுள்ள மக்களுக்கு சுவிசேஷத்தை பிரசங்கித்ததில் தன் நேரத்தை ஏன் வீணாக்கினார்.

**லீதியாள் இருதயத்தில் (மனதில்) என்ன இருந்தது? எது இல்லை?**

1. அது பரம்பரையாக வந்த சீர்கேட்டினாலல்ல. ஆதாமின் பாவத்தினால் வந்த குற்ற உணர்வு அவருடைய சந்ததியார் மீது கணக்கிடப்படுவதில்லை. அதனுடைய விளைவுகள் மட்டுமே எண்ணப்படுகிறது. மேலும் சொன்னது? நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால் பரலோக ராஜயத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத்.18:3). முற்றிலும் ஒழுங்கற்றவள் என்று சொல்லுமளவுக்கு லீதியாளிடம் எந்தச் சாட்சியமும் இல்லை.

2. அது பாவத்தினாலான கடின இருதயத்தினாலல்ல. புறஜாதியாருடைய நகரத்தில் அநேகமாக மிகுந்த சோதனைக்கு மத்தியில் அவள் தேவனைத் தொழுது கொள்ளுகிறாள். அப்படியானால் அங்கே (அவளிடம்) எது தவறு? 1. அநேக யூதர்களின் இருதயங்களைப்போல அது மூடப்பட்டிருக்கிறது.

2. யூதர்கள் மேசியா ஒரு பூமிக்குரிய யூத அரசனாக இருப்பார் என்று எண்ணினார்கள். சிலுவையிலே மரித்த எளிமையாக இயேசு அவர்களுக்கு அதிர்ச்சியாகவும் ஒரு தடையாகவும் இருந்தார்.

3. அவளுடைய இருதயம் திறக்கப்பட்டதென்று இங்கே குறிப்பிடப்பட்டிருப்பது அவள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளத் தடையாயிருந்த தவறான எண்ணங்கள் நீக்கப்பட்டதை குறிக்கிறது.